குடிமக்கள் ஊடக நிகழ்ச்சித் திட்டம்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
இரண்டாம் பாகம் - ஜுலை 2007

# vikalpa
# விகல்ப
# மாற்று வழி

## குடிமக்கள் ஊடகம் தொடர்பான முதலாவது ஒருநாள் கருத்தரங்கு நீர்கொழும்பில்...

### இன்றென்றால் “வெரி சொரி” தான்...

நாங்கள் அனைவரும் எங்கள் சென்டரில் உறக்கத்திலிருந்தோம். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இது நடந்தது. திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. டும்... நான் நேரம் என்னவென்று பார்த்தேன். இரவு 12 மணி கடந்துவிட்டிருந்தது. மீண்டும் அந்த சப்தம் கேட்டது.... டும்... நாங்கள் வானொலியை இயக்கினோம். அப்போது எமது சென்டரில் குசு-குசு வென்று பேச்சு சப்தம். ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை புலிகள் தாக்குகின்றனர் என்றார். விமானங்கள் அங்கும் இங்குமாக பறக்கும் சப்தம் கேட்டது. நான் கிடுகிடுவென நடுங்கிக் கொண்டிருந்தேன். ஏனென்றால் நான் தமிழன்... எங்கள் ஆட்கள் அவசரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பேசினர். சம்பவம் உண்மை விமான நிலையத்தை தாக்குகின்றார்கள் என்றார்கள். அத்துடன் சர்ரென்று மோட்டார் சைக்கிள் செல்லும் சப்தம் கேட்டது. நான் மேலும் பயந்தேன். நான் இன்றென்றால் “வெரி சொரிதான்” என்று என்னுடனிருந்தவர்களிடம் தெரிவித்தேன். அன்றுடன் அந்தப் பிரச்சினை முடிந்தது. ஆனால் இன்றும் என்னுடனிருந்தவர்கள் என்னைக் கண்டால் இன்றென்றால் “வெரி சொரிதான்” என்று கேலி செய்கின்றார்கள்.

காமினி வீரகோன்.
நீர்கொழும்பு

குடிமக்கள் ஊடகம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டது எனக்கு அனுபவமாகவிருந்தது. சாதாரண மக்களின் பிரச்சினைகள், அனுபவங்கள், தமது கருத்துகள் ஆகியவற்றை வெளியிட “விகல்ப” என்ற பெயரில் இணையதளம் ஒன்றிருப்பதை அறிந்து கொண்டேன். இது எமக்கு ஒரு நல்ல தகவலாகும். oh my news போன்று குடிமக்கள் இணைய தளம் தொடர்பாக நாங்கள் கேள்விப்பட்டிருக்-கின்றோம். “விகல்ப”வும் இது போன்று சிறந்து விளங்குமென்று நம்புகின்றோம். “விகல்ப”வுக்கு தொடர்ந்து விடயதானம் செய்பவர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கப்பட வேண்டும்.

**எம். சாஜஹான்.**
**கருத்தரங்கில் கலந்து கொண்டவர்.**



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப்பிரிவு மூலம் நடைமுறைப்படுத்தப்படும் குடிமக்கள் ஊடக வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு பிரதேசங்களில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ள குடிமக்கள் ஊடக கருத்தரங்கு தொடரின் முதலாவது 2007 ஆகஸ்ட் 15ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெற்றது. அக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் எழுதிய ஆக்கமே “இன்றென்றால் வெரி சொரி” தான்... என்ற தலைப்பில் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பிரதேசத்தில் பத்திரிகைகளுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றும் மக்கள் புரிந்துணர்வு நிலையத்துடன் தொடர்புடைய செயற்பாட்டாளர்கள் சிலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். எமது சமூகத்தில் முற்காலத்திலிருந்தே பாவனையிலுள்ள குடிமக்கள் தொடர்பாக வெளிவரும் பல்வேறு ஊடகங்கள் தொடர்பாக கேட்டறிந்து வலைப்பின்னல் இணையதளம் வரை அவை அபிவிருத்தி அடைந்துள்ள முறையையும், குடிமக்கள் ஊடகம் செயற்பாட்டின் போது அழுத்தங்கள் தொடர்பாக பேசப்பட்டதுடன் இந்தக் கருத்தரங்கில் நடைமுறைச் செயற்பாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. இக்கருத்தரங்கை பிரபல ஊடகவியலாளர் சீ. தொடாவத்த முன்னின்று நடாத்தினார்.

இதில் கலந்து கொண்டவர்களில் பலர் கடந்த சில நாட்களாக தபால் மூலமும் பெக்ஸ் மூலமும் “விகல்ப” இணைய தளத்தில் வெளியிடவென பல ஆக்கங்களை அனுப்பி வைத்துள்ளனர். நடைமுறையில் குடிமக்கள் ஊடகத்தில் ஈடுபடும் சிறு பிரிவினரை கிராம மட்டத்தில் உருவாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கு பலனளித்துள்ளது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

“விகல்ப” இணையதளத்திற்கு சென்று அவர்களது ஆக்கங்களை நீங்கள் வாசிக்க முடியும்.

(குடிமக்கள் ஊடக முன்னோடியான டேன் கில்மோவின் தலைமையில் தயாரிக்கப்பட்டுள்ள குடிமக்கள் ஊடக விதிமுறைகளின்படி...)

www.citizenmedia.com



# පුරවැසි ජනමාධ්‍ය මූලධර්ම

## நீதியான தன்மை

நீதித் தன்மை என்பது முறையான ஊடகத்திற்கு கட்டாய குணாம்சமாகும். அறிக்கை ஒன்றை எழுதும் போதும் தமது கருத்துடன் இருப்பதும் ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக தர்க்கம் செய்யும் போதும் தாம் நம்பும் விடயத்தை பெற்றுக் கொள்வதை விட்டு விடயங்களை ஒரு பக்கத்துக்கு சார்பாக செயற்கையாக எதிர்க்கருத்துக்களை சேர்த்துக் கொள்ளல் வாசகர்களை ஏமாற்றுவதாகும்.

நாம் எழுதிய விடயத்திற்கு எதிராகவோ அல்லது ஏற்றுக் கொண்டோ வாசகர்கள் தரும் பிரதிபலிப்புகளை கவனமாக ஆய்வு செய்வதும் பல்வேறு கருத்துகளுடன் மனதில் ஆராய்ந்து பார்ப்பதும் நீதித்தன்மையில் ஒரு பகுதியாகும் ஒரு சம்பவம் தொடர்பாக தேடித் தெரிந்து கொள்ளும் தகவல் பெரும்பாலும் ஒரு தரப்பினரின் கருத்தை உறுதிப்படுத்துவதாக தோன்றும் சந்தர்ப்பங்களில் போலியாக பக்கச்சர்பின்மையை காட்டுவதற்கு விடயங்களை மறைத்தல் அல்லது மாறுபடுத்துதல் அல்லது அடிப்படையற்ற எதிர்த்தரப்புகள் எழுப்பும் தர்க்கங்களை மேற்கோள் காட்டுவதை குடிமக்கள் நிருபர்கள் எப்போதும் மேற்கொள்ளக் கூடாது.

எப்படிக் கூறினாலும் நீதியான தன்மை மேற்படுவது நிருபரின் எண்ணங்களின் அடிப்படையிலேயே. அதனால் இது தொடர்பாக அறிக்கையிடும் போது அப்படி செய்வதற்காக தம்மை ஈடுபடுத்துவது என்ன என்பதும் குறித்தும் குடிமக்கள் நிருபர் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். தாம் தெரிவிப்பதை ஏற்றுக் கொள்பவர்களை விட எதிர்ப்பவர்களது கருத்தை அறிந்து கொள்வது முக்கியமாகும்.

## வெளிப்படைத் தன்மை

இது குடிமக்கள் நிருபர் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய வழிமுறையாகும். ஒரு விடயம் தொடர்பாக எழுதும் போது முடிந்தவரை தமது பின்னணி, சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக எழுதுவதற்கு தூண்டிய காரணங்கள், சம்பந்தப்பட்ட சம்பவத்துடன் தமக்குள்ள தொடர்பு, நிதி அபிலாஷைகள் ஆகிய எல்லாவற்றையும் வாசகர்களுக்கு வெளிப்படுத்துவது மிக முக்கியமாகும்.

பாதுகாப்பு தொர்பான அச்சுறுத்தல்கள் நிலவும் சிக்கலான சந்தர்ப்பங்களில் நிருபர்களை இனங்காட்டுவதைத் தவிர்த்து சம்பந்தப்பட்ட விடயங்களுடன் இந்த வெளிப்படைத் தன்மை தொடர்பான வழிமுறைகளுடன் சிக்கிக் கொள்ள கூடாது.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் மற்றும் பக்கசார்புத் தன்மை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊடகவியலாளர்கள் எழுதுவதை பாதிக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமக்கு நெருங்கிய விடயங்கள் தொடர்பாக குறிப்பிடும், சிலவேளை பதிப்பாசிரியர் இல்லாத இணையத்தளங்களுக்கு அந்தக் குறிப்பை அனுப்பும் குடிமக்கள் நிருபர் இது தொடர்பாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் தாம் எழுதும் செய்தி தொடர்பாக மூலங்களுடன் தொடர்பு கொள்ள வசதியை பெற்றுக் கொடுக்கவும் தாம் எழுதியதை நிரூபிக்க கூடிய வகையில் எந்த நபருக்கும் தேடிக் கொள்ளக் கூடிய தகவல்களை கொண்டிருப்பது நிருபர்களது வெளிப்படைத் தன்மையை பாதுகாக்க உதவும்.

## பிழையற்றதன்மை

முறையான ஊடகத்தின் நுழைவாயில் பிழையற்ற தன்மையே. பொதுமக்கள் ஊடகத்தின் முக்கிய வழி-முறை இதுவாகும். குடிமக்கள் நிருபர் தமக்கு கிடைக்கும் தகவல்கள் சரியானதா என்பதை பலமுறை பரீட்சித்து பார்க்க வேண்டும். செய்தியின் உண்மைத் தன்மையை பிரித்து அறிந்து கொள்வது முக்கியமாகும். இதற்காக எந்த மூலத்தில் பிரவேசிக்க வேண்டுமென்பதை நிருபர் புத்திசாலித்தனமாக தீர்மானிக்க வேண்டும்.

இணைய தளத்திற்கு எழுதும் குடிமக்கள் நிருபர் ஒரு சம்பவம் தொடர்பாக தாம் அறிந்தது என்ன என்பதைப் போல் அறியாதது என்ன என்பதையும் எழுத வேண்டும். அப்போது திறமையுள்ள வாசகர்கள் குறையுள்ளவற்றை முழுவதுமாக பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த முடியும்.

தமது ஆக்கத்தில் அடங்கியுள்ள பெயர், ஊர் அல்லது வேறு தகவல்கள் பிழையானது என்பதை தெரிந்துகொண்டவுடன் உடனடியாக அது குறித்து கவலை தெரிவித்து பிழை திருத்த வேண்டியது இந்த பிழையற்ற தன்மை என்ற வழிமுறையை சேர்ந்ததாகும்.

## கவனமான புலனாய்வு

அனுமானத்தில் எழுதுவது மற்றும் உறுதியாக ஏதாவது குறித்து அறிக்கையிடுவதற்குமிடையேயுள்ள வேறுபாடு என்ன? இருந்தும் இதில் கிடைக்கும் செய்தி மற்றும் உண்மையான தகவல்களை ஆழமாக ஆராய்ந்து பார்ப்பதற்கிடையிலுமுள்ள வேறுபாடு என்ன?

குடிமக்கள் நிருபர் எப்போதும் இது தொடாப்பாக விழிப்பாக இருக்க வேண்டும். கவனமான புலனாய்வு என்ற வழி-முறையில் தங்கியிருப்பது இதில் முக்கியமானதாகும்.

தாம் எழுதப்போகும் தலைப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு மூலங்கள் மீது முடிந்தவரை தகவல்களை தேடிக் கொள்வது தொழில்சார் ஊடகவியலாளர்கள் எதிர்பார்க்கும் குணாம்சமாகும். தேடிக்கொள்ளும் சகல தகவல்களையும் ஆக்கத்தில் சேர்த்துக் கொள்ளாமல் விடலாம். இருந்தும் பாரிய வெற்றிடங்கள் மற்றும் தெளிவற்ற இடங்களை விட்டு விடுவதற்கு மேல் பெருமளவு தகவல்களை புலனாய்வு செய்வதற்கு நேரத்தையும் சிரமத்தையும் செலவிடுவது நன்றாகும். பொறுப்புள்ள நிருபர் எப்போதும் “நான் இது தொடர்பாக வேறு யாரிடம் பேச வேண்டும்” என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொள்வார்.

இணையதளத்துக்கு எழுதும் குடிமக்கள் நிருபருக்கு சம்பந்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலதிக தகவல்களை சேகரிக்கும்படி வாசகர்களும் கேட்கலாம்.

## சுயாதீனத்தன்மை

அரச அல்லது தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாகவுள்ள சம்பிரதாயபூர்வ ஊடகங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களுக்கு வேறுபட்ட இணையத்தளத்துக்கோ அல்லது தமது தனிப்பட்ட “ப்ளொக்”களுக்கு எழுதும் குடிமக்கள் ஊடகவியலாளருக்கு அரசியல் அல்லது வர்த்தக அழுத்தங்களுக்கு உட்படாமல் சுயாதீனமாக எழுத முடியுமென்பது பார்த்த பார்வையிலேயே தெரியும்.

இருந்தும் நிதி மற்றும் ஏனைய சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஊடகவியலாளர் என்ற பதவியைப் பாவிப்பதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்குமென்பதை மறுத்துவிடக் கூடாது.

விஷேடமாக குடிமக்கள் ஊடக இணைய தளங்கள் மிகவும் பிரபலமடைந்து நிருபர்கள் குடிமக்கள் ஊடகத்தை தொழிலாக செய்ய ஆரம்பித்த பின்னர் சுயாதீனத் தன்மைக்கு சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

சம்பிரதாயபூர்வமான ஊடகவியலுக்குள் சுயாதீனத் தன்மையை பாதுகாப்பது தொடர்பாக துரதிஷ்டவசமாக தவிர்த்துச் செல்லுதம் மாற்றுவழியாக குடிமக்கள் ஊடகத்துக்கு மிகுந்த வரவேற்பு கிடைக்குமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த வரவேற்பு எதிர்காலத்தில் எதிர்பாராத வகையில் கிடைக்கும். இதை பாதுகாத்துக் கொள்வதற்கு குடிமக்கள் ஊடகவியலாளர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

## “விகல்ப” இணையதளத்துக்கு பிரவேசித்தீர்களா?




“விகல்ப” மும்மொழி குடிமக்கள் ஊடக இணையதளம் படிப்படியாக வாசகர்கள் மத்தியில் பிரபலமடைந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. பல்வேறு பிரதேசங்களிலிருந்து குடிமக்கள் ஊடகவியலாளர்கள் தமது ஆக்கங்களை “விகல்ப” இணையதளத்துக்கு அனுப்பி வருகின்றனர்.

“விகல்ப” அழுத்தம் கொடுக்கக் கூடிய யதார்த்தமான குடிமக்கள் ஊடக இணையதளமாக உருவாக செயற்பாடுள்ள குடிமக்களின் ஆர்வமும் பங்களிப்பும் அவசியம். உங்கள் பிரதேச செய்திகளை எமக்கு எழுதி அனுப்புங்கள். “விகல்ப”வில் வெளியாகும் செய்திகளுக்கு உங்கள் விமர்சனத்தை அனுப்புங்கள். “விகல்ப” தொடர்பாக உங்கள் அயலவர்களுக்கு தெரிவியுங்கள்.

**www.vikalpa.org**

## தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மற்றுமொரு கருத்தரங்கு குருநாகலையில்...



சமூக அபிவிருத்தி தொடர்பான தகவல் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயனுள்ள வகையில் பயன்படுத்துவதென்பது தொடர்பாக ஒரு நாள் கருத்தரங்கு குருநாகலை மகளிர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் 2007 ஆகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்றது. சுனந்த தேசப்பிரிய இக் கருத்தரங்கை நடத்தினார்.

கருத்தரங்கின் முதலாம் பகுதி குடிமக்கள் ஊடகத்தின் பாவனை தொடர்பானது. சிறந்த முறையில் குடிமக்கள் தொடர்பான செய்தியொன்றை எழுதுவதெப்படி என்பது தொடர்பாக நடைமுறை விளக்கமளிக்கப்பட்டது. முடிவில் கலந்து கொண்டவாக்ள் தத்தமது செய்தியை எழுதி முடித்திருந்தனர். அவற்றில் சில “விகல்ப” இணைய தளத்தில் வெளிவந்துள்ளது.

இரண்டாவது கருத்தரங்கு செப்டெம்பர் 31ஆம் திகதி மகளிர் அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

CPA
Centre for Policy Alternatives

**பொதுமக்கள் ஊடக வேலைத்திட்டம்.**

**ஊடகப் பிரிவு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 1 சீ 28ஆம் ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு –07**
**தொலைபேசி : 011-2375269, 011-2375012, தொலைநகல் : 011-2375623**
**contributions@vikalpa.org, editor@vikalpa.org, info@vikalpa.org**